செய்தி வெளியீடு எண். 32 நாள்: 18.01.2018

## அங்கன்வாடி பணியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு மறு நேர்காணல் நடைபெறவுள்ளது- மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு, மறு நேர்காணல் (சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்கள் நீங்கலாக, அதாவது திருவொற்றியூர், மாதவரம் நகர்புறம், புழல, மதுரவாயல்) கலவல கண்ணன் செட்டி இந்து மேல்நிலைப் பள்ளி வளாகம், காக்களூர் ரோடு, திருவள்ளூரில் நடைபெற உள்ளது.

அங்கன்வாடி பணியாளர்களுக்கு மறுநேர்காணல் 20.01.2018 (சனிக்கிழமை) மற்;றும் 21.01.2018 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

விண்ணப்பதாரர் அனைவருக்கும் தனித்தனியே நேர்காணலில் கலந்து கொள்ள அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மறு நேர்காணல் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் அழைப்பு கடிதத்துடன் கீழ் கண்டவாறு அசல் சான்றிதழ்கள் மற்றும் ஒரு செட்டு நகல் சான்றிதழ்கள் கொண்டுவர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், அழைப்பு கடிதத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நேர்காணலில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

1. மதிப்பெண் பட்டியல், 2. பள்ளி இறுதி சான்றிதழ் வயது குறிப்புடன் / பிறப்பு சான்றிதழ், 3. சாதிச் சான்றிதழ், 4. குடும்ப அட்டை / ஆதார் அட்டை / இருப்பிடச் சான்று, 5. பிற இனங்களுக்கான சான்றிதழ் அ) கோட்டாட்சியரால் வழங்கப்பட்ட ஆதரவற்ற விதவை சான்று, ஆ) வட்டாட்சியரால் வழங்கப்பட்ட கணவனால் கைவிடப்பட்டோர் சான்று, இ) வட்டாட்சியரால் வழங்கப்பட்ட விதவை சான்று, ஈ) மாற்றுத்திறனாளி அடையாள அட்டை, உ) ஆண்வாரிசு இல்லாதச் சான்று, ஊ) குடும்பத்தில் யாரேனும் மாற்றுதிறனாளி எனில் அதற்கான அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**